# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
***********

முறையீட்டு மனு எண்: 34/பேரூ/2018
ஆணை நாள்: 17 –12–2018

திரு. சி. ராஜவேலு,
H–4, பாலார் கார்டன்,
சத்துவாச்சாரி, வேலூர் – 632 009. – முறையீட்டு மனுதாரர்

திரு. கோபால்,
முன்னாள் செயல் அலுவலர்,
ஒடுகத்தூர் பேரூராட்சி,
வேலூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

## ஆணை

முறையீட்டு மனுதாரர் 31.01.2018 நாளிட்ட புகார் மனுவினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைத்தார். மேற்படி மனு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ விதிகள், 2015ன் விதி 4–ன்படி உரிய படிவத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, உரிய படிவத்தில் முறையீட்டு மனுவினை தாக்கல் செய்யுமாறு இம்முறைமன்ற நடுவ 07.02.2018 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மனுதாருக்கு ஆணையிடப்பட்டது. அதன் பின்னர் மேற்படி மனுதாரரது உரிய படிவத்திலான 21.02.2018, நாளிட்ட முறையீட்டு மனு 23.02.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்.34/18 ஆக எண்ணிடப்பட்டது. மேற்படி மனு தொடர்பாக உரிய அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் நடத்தப்பட்டும் முறையே பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறான ஆணைகள் வெளியிடப்படுகின்றன:–

முறையீட்டு மனுதாரரது முறையீட்டு மனுவுடன் வரப்பெற்ற 25.05.2017 நாளிட்ட முறையீட்டு மனுவில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன்படி, ஒடுகத்தூர் பேரூராட்சியிலிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி 2015–16 நிதியாண்டில் ஒடுகத்தூர் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணியாற்றிய போது திரு. கோபால் என்பவர் சுமார் 1 கோடி அளவில் ஊழல் புரிந்துள்ளதாகத் தெரிவித்து, 8 பணிகள்/இனங்களைக் குறிப்பிட்டு விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

முறையீட்டு மனுதாரர் ஒடுகத்தூர் பேரூராட்சியில் ஏப்ரல் 2015 முதல் 2016 வரை நடைபெற்ற பணிகள் தொடர்பான விவரங்கள் மற்றும் செலவின விவரங்களை தகவல் அறியும் உரிமைச்

சட்டத்தின்படி பெற்று அதனடிப்படையில், அவ்விவரங்களடங்கிய கடிதங்களை இணைத்து மேற்படி முறையிட்டு மனுவினை அனுப்பியுள்ளார். ஆனால், எந்த ஒரு பணி குறித்தும் குறிப்பாக எந்த வகையில் ஊழல்/முறைகேடு என்பதற்கான எந்தவொரு ஆதாரமும் சமர்ப்பிக்கப்படவில்லை. இருப்பினும், மனுதாரரது புகார்கள் குறித்த விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு ஒடுகத்தூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 28.02.2018 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது. பின்னர், இம்முறைமன்ற நடுவ 11.09.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி எதிர்மனுதாரராகிய முன்னாள் ஒடுகத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரும், தற்போது பாப்பிரெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலருமான திரு. கோபால் என்பவரிடம் 01.11.2018 அன்று விசாரணை நடத்தப்பட்டு, வாக்குமூலம் பெறப்பட்டது. மேற்படி வாக்குமூலத்தில் கீழ்கண்டுள்ளவாறான விவரங்களை பதிவு செய்துள்ளார் :—

“தான் ஒடுகத்தூர் பேரூராட்சியில் 09.10.2015 முதல் 31.10.2016 வரை பணிபுரிந்ததாகவும், தற்பொழுது பாப்பிரெட்டிபட்டி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். திரு. ராஜவேலு என்பவர், தமிழ்நாடு அனைத்து துறை பணியாளர்கள் சங்கம் என்று வைத்துள்ள சங்கம் பதிவு செய்யப்படாத, அரசு அங்கீகாரம் இல்லாத போலி சங்கமாகும் என்றும் இந்த சங்கத்தின் பெயரில் பொது தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் சில விவரங்களை பெற்றுக்கொண்டு எந்தவித அடிப்படை ஆதாரமும் இல்லாமல் புகார் எழுதுவது செயல் அலுவலர்களை மிரட்டி பணம் வசூலிப்பது போன்ற செயல்களில் ஈடுபட்டுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

சில செயல் அலுவலர்கள் இதற்கு பயந்து தாங்களாகவே முன்வந்து பணம் கொடுத்தனர் எனவும், இது குறித்து தன்னால் ஏற்கனவே உதேயந்திரம் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணியாற்றிய காலத்தில் பணம் கொடுக்காததால் இதுபோன்று பொய் புகார் அளித்துள்ளார் என வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளதாகவும், தன்மீது மீண்டும் விரோதம் கொண்டு இந்த புகார் மனுவை அளித்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

2015 ஏப்ரல் முதல் ஜூலை வரை திரு. ரவிக்குமார் என்பவர் செயல் அலுவலராக இருந்தார் என்றும் அவர் பணி ஒய்வு பெற்றுவிட்டதாகவும், மனுவில் குறிப்பிட்டுள்ள காசோலை விவரங்கள் டெண்டர் விவரங்கள் தன் பணி காலத்தில் இடம் பெறவில்லை எனத் தெரிவித்துள்ளதுடன் தன்னுடைய பணிக் காலத்தில் 2 மாதத்தில் பிப்ரவரி 2015 முதல் மார்ச் 2016 வரை ரூ.15.00 லட்சம் நிலுவைத் தொகை மின்சார வாரியத்திற்கு கட்டப்பட்டுள்ளது என்றும் கிராம நத்தம் பகுதிகளுக்கு மட்டுமே கட்டிட அனுமதி அங்கீகாரம் அளித்துள்ளதாகவும், அங்கீகாரம் இல்லாத மனைகளுக்கு கட்டிட அனுமதி அளிக்கப்படவில்லை என்றும் 2015–2016 ஆண்டுகளுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் இணையதள டெண்டர் மூலம் மண்டல அளவில் பெறப்பட்டது எனவும் உதவி செயற் பொறியாளர், உதவி பொறியாளர் மூலம் பகுத்தாய்வு செய்யப்பட்டு அதன் பின் மன்றத்தில் வைத்து ஒப்புதல் பெற்ற பின்புதான் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மன்ற ஒப்புதல் பெறவில்லை என்பது தவறாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், முதல்வர் தனி பிரிவிற்கு தன்னால் எந்த கடிதமும் அனுப்பப்படவில்லை என்றும் இவர் பணத்திற்காக இது போன்று பொய்யான மனுக்கள் போடுவதால் தனக்கும் பணம் கொடுக்காத செயல் அலுவலர்களுக்கும் மன உளைச்சல் ஏற்பட்டுள்ளதாகவும் இதுபோன்று பொய்யாக மனுக்கள் அனுப்புபவரை தண்டிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனடிப்படையில் பரிசீலித்ததில், மனுதாரர் திரு. கோபால், ஒடுகத்தூர் பேரூராட்சியின் செயல் அலுவலராக பணிபுரியாத 4/15 முதல் 8/15 வரையிலான காலங்களையும் குறிப்பிட்டு அவர் மீது புகார் அளித்துள்ளதும் பொய்யான புகார் என்று புலனாகிறது. எனவே, குறிப்பாக எந்த ஒரு பணியில், எந்த வகையில் ஊழல் நடைபெற்றது என்பதற்கான ஆதாரங்கள் மற்றும் புகாரில் குறிப்பிட்டுள்ள காலங்களில் எதிர்மனுதாரராக குறிப்பிட்டுள்ள செயல் அலுவலர் திரு. கோபால் மேற்படி பேரூராட்சியில் பணியாற்றி புகாரில் குறிப்பிட்டுள்ள பணிக்கு பணி ஆணை வழங்கிய வகையிலோ அல்லது எந்த ஒரு வகையிலோ ஊழல் புரிந்துள்ளார் என்பதற்கான ஆதாரங்கள் அளிக்கப்பட வேண்டுமென மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மனுதாரர் தனது 01.12.18 நாளிட்ட கடிதத்தில் ஒடுகத்தூர் பேரூராட்சியில் ஓராண்டில் சுகாதாரப் பணி மற்றும் பைப் ரிப்பேர் பணிகளுக்கு ஆலங்காயம் நாட்றாம்பள்ளி ஆகிய பேரூராட்சிகளைவிட 4 மடங்கு கூடுதலாக செலவிடப்பட்டுள்ளதெனவும், வாங்கிய பொது சுகாதாரப் பணிக்கான பொருட்களுக்கு மேஸ்திரி திரு. N ஞானமணி, இருப்புப் பதிவேடு மற்றும் இருப்புப் பதிவு பராமரிக்கவில்லை என்றும் இதுவே ஆதாரமாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார். பிற பேரூராட்சிகளை பொதுவான ஒப்பீடாக குறிப்பிட்டுள்ளதைத் தவிர குறிப்பான செலவினங்களில் முறைகேடு என விலை விவரங்கள் அல்லது வாங்கப்பட்ட அளவுகள் அல்லது தேவைப்பட்டியல் தீர்மான நகல் போன்ற எந்த ஒரு விவரமும் மனுதாரரால் அளிக்கப்படவில்லை.

ஒடுகத்தூர் பேரூராட்சியில் திரு. கோபால், செயல் அலுவலராக பணிபுரியாத காலத்தையும் குறிப்பிட்டு அவர் மீது முதலில் புகார் அளித்தது குறித்து எந்த ஒரு விளக்கமும் அளிக்கப்படாத நிலையில், மேஸ்திரி திரு. ஞானமணி என்பவர் இருப்புப் பதிவேடு பராமரிக்கவில்லை என்றும் அதுவே ஆதாரம் என்றும் திடீரென மேற்படி பிறிதொரு பணியாளர் மீது புகார் அளித்துள்ளார். இருப்பினும், மேற்குறிப்பிட்ட குறைபாடுகள் கருதி, இவரது மனுவினை புறந்தள்ளாமல், இம்முறைமன்ற நடுவம் 2015–16ஆம் ஆண்டிற்கான இருப்புப் பதிவேட்டின் எடு பிரதியினை உரிய மேலொப்பத்துடன் இம்முறைமன்ற நடுவ பரிசீலனைக்கு உடன் அனுப்பி வைக்குமாறு ஒடுகத்தூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும், ஒடுகத்தூர் பேரூராட்சியில் மேஸ்திரியாக பணி புரிந்தவரும், தற்போது கலவை பேரூராட்சியில் பணிபுரிபவரும் மற்றும் மனுதாரரால் புகார் கூறப்பட்டவருமான திரு. ஞானமணி என்பவரை 10.12.18 அன்று நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்குமாறும் ஆணையிடப்பட்டது.

மேற்படி ஆணைகளுக்கிணங்க ஒடுகத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 07.12.18 நாளிட்ட அறிக்கையுடன் 2015–16ஆம் ஆண்டில் பொது சுகாதாரம் மற்றும் குடிநீர் பராமரிப்பு பணிகளுக்கான இருப்புப் பதிவேடு மற்றும் வருகைப் பதிவேட்டின் நகல்களை உரிய மேலொப்பத்துடன் 10.12.18 அன்று சமர்ப்பித்துள்ளார். மேலும், திரு. ஞானமணி, மேஸ்திரி என்பவரும் 10.12.18 அன்று நேரில் ஆஜராகி கீழ்க்கண்டவாறான தனது எழுத்து பூர்வமான வாக்குமூலத்தையும் சமர்ப்பித்துள்ளார்:–

தான் ஒடுகத்தூர் பேரூராட்சி துப்புரவு மேற்பார்வையாளராக 2016வரை பணிபுரிந்துள்ளதாகவும், அதன் பின்பு உதயேந்திரம் பேரூராட்சியில் ஜுன் 2018 வரை பணிபுரிந்ததாகவும். தற்போது கலவை பேரூராட்சியில் ஜுலை 2018 முதல் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். திரு. ராஜவேலு என்பவர், ஒடுகத்தூர் பேரூராட்சியில், தான் பணிபுரிந்த காலத்தில் துப்புரவு பொருட்களை (சுகாதாரபணி) ஸ்டாக் ரிஜிஸ்டர் (இருப்பு பதிவேடு) பராமரிக்கப்படவில்லை என புகார் அளித்துள்ளது முற்றிலும் பொய்யானதாகும் எனத்

தெரிவித்தார். இருப்பு பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்பட்டதற்கு ஆதாரமாக அவற்றின் பிரதிகளை ஒடுகத்தூர் பேரூராட்சியின் செயல் அலுவலர் மூலமாக இன்று நேரில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தையும் தெரிவித்தார்.

தான் ஏற்கனவே உதயேந்திரம் பேரூராட்சி தொடர்பாக திரு. ராஜவேலு அவர்கள் அளித்த புகார் குறித்து மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களிடம் நேரில் ஆஜராகி வாக்குமூலம் சமர்ப்பித்ததன் காரணமாக பழிவாங்கும் நோக்கத்தில் முன்னாள் ஒடுகத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. க. கோபால் பெயரிலு, தன் மீதும் இது போன்று பொய்யான புகார்களை அளித்துள்ளார் என்பதை தெரிவித்துக் கொள்வதாகவும் கூறியுள்ளார். மேலும், அவர் இதுபோன்று புகார்கள் அனுப்பி தங்களை மிரட்டி பணம் பெறுவதற்காக இது போன்று செய்ல்படுகிறார் என்றும் அவர்மீது தக்க நடவடிக்கை எடுக்க ஆணையிடும்படியும் கேட்டுக் கொண்டுள்ளார்.

முன்னாள் ஒடுகத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரும், தற்போது பாப்பிரெட்டிபட்டி பேரூராட்சியில் பணிபுரிபவருமான திரு. கோபால் எதிர்மனுதாரர், 10.12.2018 நாளிட்ட மின்னஞ்சல் கடிதம் மூலம் தான் <u>9.10.2015 முதல் தான்</u> ஒடுகத்தூரில் பணி பொறுப்பேற்றுக் கொண்டதாகவும், 9.10.2015 முதல் 31.3.2016 முடிய எவ்வித பணிகளுக்கும் டெண்டர் விடப்படவில்லை எனவும் செலவினங்கள் குறித்து ஒவ்வொரு மாதமும் பேரூராட்சி மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டும் தனது விரிவான கூடுதல் விளக்கங்களையும் சமர்ப்பித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட சுகாதாரப் பணியாளர், திரு. ஞானமணி என்பவரது வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்ட, உதயேந்திரம் பேரூராட்சி தொடர்பாக இதே மனுதாரரால் அளிக்கப்பட்ட புகார்கள் குறித்து பிறப்பிக்கப்பட்ட இம்முறைமன்ற நடுவ ஆணை எண்.306/2017 நாள்:27.12.2017 பரிசீலிக்கப்பட்டது. அதில் மேல்படி திரு. கோபால் செயல் அலுவலர், மற்றும் திரு. ஞானமணி, துப்புரவு பணியாளர் ஆகியோர் வாக்குமூலங்கள் அளித்துள்ளது குறிப்பிடப்பட்டும் மனுதாரர் கூறியுள்ள புகார்கள் நிரூபணமற்றவை என உறுதி செய்து கீழ்க்கண்டவாறான அறிவுரைகளடங்கிய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

"...இவ்வினத்தைப் பொறுத்தமட்டில் ஒரு பணியாளர் தனது வெறுப்பினையும், கோபத்தையும் வெளிக்காட்ட வடிகாலாக சங்கம் என்ற ஒரு அமைப்பினை நாடியுள்ளது அவரது வாக்குமூலத்தின் மூலமே நன்று புலனாகிறது. மேலும், உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாக சீர்கேடு, ஊழல் மற்றும் நிதி இழப்பு தொடர்பான விசாரணைக்கென ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம் மற்றும் விதிகளுக்கு மாறாக தனி நபர்களது விருப்பு, வெறுப்புகளை சங்கம் என்ற பெயரில் முன்னெடுத்து கால விரயம் ஏற்படுத்துவது ஏற்புடையதல்ல எனவும் இம்முறைமன்ற நடுவம் சுட்டிக்காட்ட விழைகிறது. மேலும், இவ்வினத்தில் கண்டறியப்பட்ட அனைத்து முரண்பாடுகளுக்கும் பொறுப்பான திரு. ஞானமணி, துப்புரவு மேற்பார்வையாளரை இம்முறைமன்ற நடுவம் கடுமையாக எச்சரித்து மேல் நடவடிக்கையினை கைவிடலாமென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.. .."

மேற்கண்டவாறு அறிவுரைகள் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தும், முறையீட்டு மனுதாரர் மீண்டும் இந்த முறையீட்டிலும் ஆதாரமற்ற புகார்களை தாக்கல் செய்தும், பேரூராட்சி பணியாளர்களை மிரட்டி பலனடையும் வகையில் செயல்பட்டுள்ளதும் விசாரணைகள், வாக்குமூலங்கள் அறிக்கைகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் உறுதியாகிறது. மனுதாரரின் இத்தகைய செயல்பாடுகள் மூலம் இம்முறைமன்ற நடுவத்தின் கால நேரம் விரயம் செய்யப்பட்டுள்ளதும், பேரூராட்சி அலுவலர்கள்/பணியாளர்கள் தொடர் விசாரணைகள் மூலம்

அரசு/பேரூராட்சிக்கு ஏற்பட்டுள்ள போக்குவரத்து செலவினம், கடிதப் போக்குவரத்துகள் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு, இத்தகைய முரண்பாடான செயல்பாடுகளுக்கு மனுதாரர் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென எச்சரிப்பதோடு மட்டுமல்லாமல் ரூ.5000/– (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) மனுதாரருக்கு செலவுத் தொகை செலுத்திட வேண்டுமெனவும் ஆணையிடப்படுகிறது.

மனுதாரர் மேற்படி தொகையினை ஒடுகத்தூர் பேரூராட்சியில் செலுத்தியதை உறுதி செய்து செயல் அலுவலர் 30தினங்களுக்குள் அறிக்கை சமர்ப்பித்திட வேண்டுமெனவும் ஆணையிடப்படுகிறது. மேலும் முறையீட்டு மனுதாரர் பேரூராட்சிகளின் அலுவலர்கள் பணியாளர்களை விதிகளுக்கு முரணாக அணுகுவது/மிரட்டுவது போன்ற புகார்கள் குறித்து துறைத் தலைமை/மாவட்ட நிர்வாகம் கண்காணித்து உரிய நடவடிக்கை மேற்கொள் பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

-தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளருக்காக.

பெறுநர்

1. திரு. சி. ராஜவேலு,
   H–4, மாலர் கார்டன்,
   சத்துவாச்சாரி,
   வேலூர் – 632 009.
2. திரு. கோபால்,
   செயல் அலுவலர்,
   பாபிரெட்டிப்பட்டி பேரூராட்சி,
   வேலூர் மாவட்டம்.
3. செயல் அலுவலர்,
   ஒடுகத்தூர் பேரூராட்சி,
   வேலூர் மாவட்டம்.
4. திரு.ஞானமணி,
   துப்புரவுப் பணியாளர்,
   கலவை பேரூராட்சி,
   வேலூர் மாவட்டம்.
5. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   வேலூர் மண்டலம்,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   வேலூர்.
6. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   மாவட்ட ஆட்சியரகம்,
   வேலூர்.